# ார்வாள்

மக்களின் அபினாகிய மதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது கலாசாரப் புரட்சி வேலைகளில் மிக முக்கியமானது. இந்தப் போராட்டம் இடைவிடாமலும் முறையாகவும் நடந்து கொண்டிருக்கவேண்டும்.

—லெனின்.

ள்: காஞ்சி. மணிமொழியார்
ஞ்செழியன், B.A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1979
மாசி 16
28—2—48 சனிக்கிழமை

வீச்சு 28


# ★ நினைவு மேடை ★

## யப்பா தலைவிதி !

கடுத்தாலும் தலைவிதியைக் காரணமாகக் நச்சு மனப்பான்மை நாட்டில் வேரூன்றி ல்தான் நம் சமுதாயம் மிக மிகப் பின்னணி கிறது என்பது பெரியாருடைய கருத்து. ட்டு மக்களின் இரத்தத்தோடு இரத்தமாக போயிருக்கிற இந்தத் தலைவிதி தத்துவத்தை அவர் போர்க் கொடி உயர்த்தியதும், நம்பிக் தியும் தொலைய வேண்டும் என்பதற்காக டேங்கும் சண்டமாருதப் பிரசாரம் புரிந்ததும் ம் அறிந்தவை. தலைவிதி வெறும் புரட்டு ண்ணம் அவருக்கு இளமை முதலே இருந்து ன்று தெரிகிறது.

ர் சிறு பிள்ளையாய் இருந்த போது ராமநாத ன்பவர் ஒருவர் ஈரோட்டுக் கடைத்தெருவில் வத்திருந்தார். அதே தெருவில் ஈ. வெ. ரா. ய தகப்பனாரும் மண்டிக் கடை வைத்திருந் . வெ. ரா. தன் தகப்பனார் கடைக்குச் போதெல்லாம் அந்த ராமநாதய்யர் கடை வந்ததும் அங்கே சிறிது நேரம் நின்று அந்த ம் ஏதேனும் தர்க்கம் செய்து விட்டுத்தான் . அய்யர், தலைவிதியின்படிதான் எதுவும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். ஈ. வெ. ரா. தலைவிதி என்பதாக ஒன்றுமே கிடை யாது என்று அந்த அய்யரிடம் வாதாடுவது வழக்கம்.

ஒரு நாள், வழக்கம்போல, தலைவிதி—இல்லையா என்பது பற்றி இருவரும் காரசாரமாக வாதமிட்டுக் கொண்டிருந்தனர். எது வந்தாலும் அதற்குக் காரணம் தலைவிதிதான் என்றார் அய்யர். "கிடையவே கிடையாது. தலைவிதி என்பதெல்லாம் வெறும்பொய்" என்றார் ஈ. வெ. ரா. "இல்லை—இல்லை. தலைவிதியின் படிதான் எல்லாம் நடக்கும்" என்றார் அய்யர். அப்படியானால் எல்லாவற்றிற்குமே தலைவிதிதான் காரணமா என்று கேட்டார் ஈ. வெ. ரா. "ஆம்" என்று தலை அசைத்தார் அய்யர். அய்யர் கடையின் முன் தட்டி கால் கொடுத்து தூக்கி வைக்கப் பட்டிருக்கும். ஈ. வெ. ரா. அத் தட்டியின் முன் காலைத் தட்டிவிட்டார். தட்டி அய்யர் தலைமேல் விழுந்தது. அய்யர் "அடபாவி" என்று அலறிக் கொண்டு எழுந்து ஓடி வந்தார் ஈ. வெ. ரா. வைப் பிடிக்க. சிரித்துக் கொண்டே சொன்னார் ஈ. வெ ரா. "தலைவிதி உன் தலையில் தட்டியைத் தள்ளி விட்டது; நான் என்ன செய்யட்டும்" என்று. அய்யர் முகத்தைப் பார்க்க வேண்டுமே அப்போது!

— — —

ு இடம் என்பதே திராவிடமாம்—திராவிடம் என்பது தமிழ்ச்சொல்லே!

# தென் இந்தியப் பிரிவினையை அமைச்சர் குழுவும் ஆதரிக்கு

## போய்ப் போய் வருகின்றனரே டில்லிக்கு!

## அனுபவம் உண்டோ அவர்களுக்கு!

### அறிஞர் ஜி. டி. நாயுடு விளக்கவுரை

**தென் இந்தியாவில் பல புதிய தொழிற்சாலைகளைத் துவக்குவதற்காகத் தான்** எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் வட இந்திய சர்க்கார் தடுத்து நிறுத்திவிட்டதை நிரல் நிரலே விளக்கிக் காட்டினார் அகில தமிழர் மாநாட்டில், விஞ்ஞானி ஜி. டி. நாயுடு மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்ட கருத்துரைகள் :—

வட இந்தியப் பிணைப்பிலிருந்து தென் இந்தியா ஏன் பிரிந்தாக வேண்டும் என்பதைத் திட்ட வட்டமாக விளக்குவதற்காகவே என் சொந்த அனுபவங்களை யெல்லாம் இவ்வளவு அதிகமாகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் உங்களுக்குச் சொன்னேன். இதிலிருந்து தென் இந்தியா பிரிந்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் வந்திருப்பீர்கள்.

வருமான வரி வழக்குகளிலும், வருமான வரி விதிப்பிலும், இந்தியாவிலுள்ள இதர மாகாணங்களை விட, தென் இந்தியாவே அந்த இலாகாவின் கொடுமைக்கும் அதிக வரி விதிப்புக்கும் உள்ளாகி நசுக்கப் பட்டிருக்கிறது. வரி விதிக்கப் பட்டுள்ள வர்த்தக ஸ்தாபனங்களின் சதவிகிதாசாரத்தை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் அதில் சென்னை மிக உயர்ந்திருப்பதைக் காண்பீர்கள்.


தென்னிந்தியாவின் வளர்ச்சியைக் கெடுப்பதற்கு, வரிப்பளுவோடு இம்சையும் இணைக்கப்பட்டிருக்கிறது. யாரேனும் இதற்கான புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால், சிறிதும் சந்தேகத்துக்கிடமின்றி நான் சொல்லும் உண்மையை பிரத்தியட்சமாய் அறிய முடியும். துரதிஷ்டவசமாக, அந்தப் புள்ளி விவரங்கள் பொதுஜனப் பார்வைக்கு அகப்படுவதில்லை; அதற்குக் காரணம் சர்க்காருக்குள்ள பயமோ அல்லது சர்க்காரே இந்தப் புள்ளி விவரங்களை வைத்திருப்பதே இல்லையா, நான் அறியேன்.

சென்னை நிதி மந்திரி திரு பி. கோபால் ரெட்டி அவர்களுக்கு 1-6-47-இல் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தின்போது நான் கீழ்வருமாறு கூறினேன்:—

பொதுவாக, வட இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடையே பிளவு மனோபாவங்கள் வளர்ந்து வருகின்றது. தலைவர்கள் அதற்கு ஒட்டுப்போட முயன்றாலும் அது முடியாதென நினைக்கிறேன்.

ஏழு அல்லது எட்டு வருடங்களுக்கு முன், திரு ஈ. வே. இராமசாமிப் பெரியார், திரு ஜின்னாவின் பாக்கிஸ்தான் பிரசாரத்துக்கு முன் திராவிடஸ்தான் பிரசாரத்தை ஆரம்பித்தார். அப்பொழுது இங்குள்ளவர்களெல்லாம் ஈ. வே. ரா. நாயக்கர் கிழடு தட்டிய பைத்தியக்காரராய் விட்டார் என்று நினைத்தார்கள். சில காலத்துக்குப்பின் டாக்டர் சி. இராஜகோபாலாச்சாரியும் ஈ. வே. ரா, கருத்தை ஒத்துக்கொண்டார். அதற்குமேல் அவர்களிருவர் பேரிலும் விரோதப் பிரசாரம் பலராலும் ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது, இதுவரை நமக்கு ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து, நாம் தற்சமயம் கண்டு வருபவைகளிலிருந்து, இனிப் பின்னால் நாம் காணப் போகிறவைகளிலிருந்து, ஈ. வே. ராவால் விளக்கப்பட்டு ஆச்சாரியாரின் ஆதரவு பெற்ற திராவிடஸ்தான் கொள்கை நியாயமும் அவசியமுமானதென்றே நானும் கூற வேண்டியவனாயிருக்கிறேன்."


நமது மந்திரிகள் சென் நடு நிசிவரையில்—சில ச இரவு 1, 2-மணி வரை செய்வதைப் பார்த்திருக் இரண்டொரு மந்திரிகளை பேசவேண்டுமென்று போது, அவர்களைக் கா காக எனக்கு பல அநேக



அறிஞர் ஜி. டி. நாயு

துக்கொண்டிருப்பதைப் தேன். மேலும் அவர்கள் துவரா தஸ்தாவேஜுகளை (Files) கொண்டு சிரமத்தோடு ச யும் கவனிக்க வேண்டிய யிருப்பதையும் பார்த்தேன்

(11-ம் பக்கம் பார்க்



# கடிதம்

தோழர் ஜீவானந்தம் அவர்கள்,
ஜனசக்தி ஆபீஸ், சென்னை.

கம், சென்ற திங்கள்
வாழ்க்கை ஒப்பந்தம்
ாமே! துணைவியார்,
ர்களாமே! பட்டம்
வர்களாமே! பொது
ப்பணியிலேயே, தங்க
ல, தன் வாழ்க்கையை
ம் . செய்துவிட்டவர்க
கம்யூனிசக் கருத்து
செயல் முறையில்
வருவதற்காக நீங்களும்
ட்டுத் தோழர்களும்
வரும் அறப் போரில்
ளும் பெரும் பங்கு
உழைத்து வருபவர்க
ஏன் அண்ணு நீங்கள்
ம் செய்து கொண்ட
என்னைக்கூட அழைக்க
நான் ஒரு தம்பி இருக்
என்பதைக் கூடவா
ட்டீர்கள்? "ஐயா"
ன் உங்களுக்கு பழைய
ம்! என்னிடம் கூடவா?
ான் ஜீவா அண்ணு,
ளே ஆயிரம் கருத்து
டு இருந்தாலும், குடும்
ண்டை நெஞ்சை விட்டு
மல் இருந்தாலும், திரு
என்று சொல்லி இருந்
ங்கள் வந்திருக்க மாட்
? மற்ற பல விழாக்களைப்
தா திருமணம்? இன்று
யல் நாளை உண்டு மற்
ழா—செல்வோம்—மன
பெறுவோம் என்று

கூறித் திருப்தியடைய! திருமணம் வாழ்வில் ஓர் திருநாள்! மீண்டும் வாராத நாள். ஒரே ஒரு நாள். அந்த நாளில் கூட உமக்குள்ள ஒரே ஒரு தம்பியை—என்னை மறந்துவிட்டீரே! இது நியாயமா, அண்ணு? நீங்களே நினைத்துப் பாருங்கள்—ஓய்விருக்கும்போது!

நீங்கள் பிறந்த குடும்பத்திலே தான் தகராறு, இங்குள்ள "தட்ப வெப்ப நிலை" உங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ள வில்லை, போய்விட்டீர்கள் வெளியே என்று பார்த்தால் நீங்கள் வளர்ப்புப் பிள்ளையாகப் போன இடத்திலே கூட தங்களுக்கு அவ்வளவு சுமுகமான உறவு இல்லையாமே, உண்மையாகவா அண்ணு? அங்கே தங்களை "ஒரு மாதிரி" பார்க்கிறார்களாமே, "என்னடா இவன் சனியன்! பெருங்காயம் இருந்த பாண்டம் மாதிரி அடிக்கடி பழைய வாசனையைக் காட்டி விடுகிருன்" என்று குசுகுசு வென்று பேசுகிருர்களாமமே. "அந்த அண்ணுத்துரை வர்ர கூட்டத்துக்குப் போனு அவன் பக்கமா பேசித் தொலைக்கருன்—சூனு மானுவுங்க இருந்தா அதுககிட்ட "அப்ளாஸ்" வாங்கருன்—நம்ம பழைய ஜீவானந்தம் தெரியுமாடா, இப்படித் தாண்டா பேசுவார் என்று இவன் அங்கே பேசறதைக் கேட்டுட்டு, அந்த சூத்திரப் பசங்க ஊளிக் கொட்டுது—நேக்கு ஒண்ணுமே தோணல்லே—இவனை வெச்சிக்கிட்டு மெல்லவும் முடியல்லே விழுங்கவும் முடியல்லே" என்றெல்லாம் "எது எதுகளோ", உங்கள் வட்டாரத்தில், இரகசியமாக, யாரும் கேளாத இடங்களில், தனியே, "தங்களவா" மட்டும் கூடுகிற நேரத்தில் "உபய குசலோபரி" செய்கின்றனவாமே! மெய்தானு அண்ணு? அண்ணன்தான் நம் குடும்பத்தைவிட்டுப் போய்விட்டாரே! கோபித்துக்கொண்டு போன இடத்திலே யாவது நலமாய் வாழட்டும் என்று நான் அடிக்கடி மனமார நினைப்பதுண்டு. ஆனல் அந்த நினைப்பை நசுக்கி நாசமாக்கி விடுகின்றன இததகைய சேதிகள்.

"செ! சே! அப்படியெல்லாம் இராது. மகா ரோஷக்காரரான நம் அண்ணன் அப்படி இருந்தால் அங்கே இருப்பாரா ஒரு விநாடியாவது! நம்ம "ஐயா" கோபத்தில் சொன்ன ஏதோ ஒரு வார்த்தைக்கே மனம் தாளாமல் வீட்டை விட்டே சென்று விட்ட அண்ணு இவ்வளவையுமா அந்த இடத்தில் பொறுத்துக் கொண்டிருப்பார்! இருக்கவே இருக்காது" என்றுதான் என் மனம் சொல்கிறது. ஆனல் நம்பத்தக்க வட்டாரங்களிலிருந்தே, அடுக்கடுக்காக, இத்தகைய சேதிகள் வரும்போது, நான் என்ன செய்வேன், இல்லாமலா சொல்வார்கள் என்று என் மனம்கூட எண்ணத்தொடங்கிவிடுகிறது. அந்த எண்ணத்தை வளர்த்துவிட்டது தாங்கள் "ஈரோட்டுப் பாதை" என்ற தலைப்பில் எழுதிவரும் நீண்ட கட்டுரை.

"என்னை என்னவென்று எண்ணிக் கொண்டீர்கள்?

பிறந்த குடும்பத்துப்பற்று எனக்குக் கொஞ்சம்கூடக் கிடையாதே! இதோ பாருங்கள் நான் எப்படித் தாக்குகிறேன் அவர்களை'' என்று காட்டத்தான் நீங்கள் இந்தக் கட்டுரையை எழுதி வருகிறீர் என்று உங்கள் வட்டாரத்துச் சிட்டுக் குருவிகளே கீச்சுக். கீச்சு என்னும் போது நான் எப்படி அண்ணா அதை நம்பாமல் இருக்கமுடியும்?

"அதெல்லாம் ஒன்றுமே கிடையாது, தம்பி! இளஞ்செழியன் என்னும் ஓர் தோழர் **ஈரோட்டுப் பாதை** என்ற சிறு நூல் ஒன்று எழுதி உள்ளார். **நம்முடைய இருபது ஆண்டுப் பயணம் வீணாகவில்லை. நாம் தொடங்கிய காரியம் எதுவும் வெற்றி தராமல் போனதுமில்லை. பல போராட்டங்களில் எதிர்பார்த்ததற்கு மேல் பலன் அடைந்தும் இருக்கிறோம். நம்முடைய பாதையோ ஆபத்துகள் செறிந்தது—ஆனால் இலட்சியத்தை நிறைவேற்றுவது** என்று அந்த இளைஞர் தன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அவருக்கென்ன தெரியும், நேற்றுவந்த குழந்தை! அனுபவமில்லாதவர். இயக்க வரலாற்றினை முழுதும் அறியாதவர். அதன் துவக்க கட்டத்தில் அதனோடு இருந்து பழகாதவர். ஆனால் ஆர்வம் மிக்க இளைஞர். ஈரோட்டுப் பாதைதான் தமிழ் மக்களின் இலட்சிய புரியை அடைவதற்கான சிறந்த பாதை என்று தவறாக எண்ணிக்கொண்டு கிடக்கிறார். அவரைப் போலவே ஈரோட்டுப் பாதைதான் சிறந்த மார்க்கம் என்று நம்பி அதன் வழிச் செல்கிற இளைஞர்கள் தமிழ்நாட்டில் பலர். அவர்களுக்கு உண்மையை எடுத்துக் காட்டத்தான் நான் எழுதினேன் என் கட்டுரையை. இளஞ்செழியன் எழுதிய ஈரோட்டுப் பாதை புத்தகத்துக்குப் பதில் என்னுடைய "ஈரோட்டுப் பாதை" கட்டுரை—என்று நீங்கள் சொல்லலாம். சொல்லலாம் என்பதென்ன, நிச்சயம் சொல்வீர்கள். ஆனால் நான் நம்பமாட்டேன். நான் மட்டுமா, உண்மையை ஓரளவுக்கேனும் உணர்ந்திருக்கிற எவருமே நம்பமாட்டார்கள்.

அன்புள்ள ஜீவா அண்ணா, கோபித்துக்கொள்ளமாட்டீர்கள் என்றால் ஒன்று கேட்கிறேன், நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள், ஒளிவு மறைவின்றி சொல்லுங்கள், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்படுவதானால் சொல்லுங்கள், அத்தகைய அச்சம் தயை தாட்சண்ணியத்திற்கும் அஞ்சாத நெஞ்ச வீறு உண்டானால் சொல்லுங்கள், நீங்கள் எழுதியுள்ள கட்டுரை, உண்மையிலேயே நண்பர் இளஞ்செழியன் தீட்டிய "ஈரோட்டுப் பாதை"க்குப் பதிலா அல்லது உங்கள் வட்டாரத்திலேயே உங்கள்மீது வீசப்படும் (பழைய சூனாமானா தன்மையிலிருந்து மாறவில்லை என்ற) குற்றச்சாட்டிற்குப் பதிலா? நம்ப தம்பி தானே கேட்கிறான் என்று அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். தங்களுடைய நீண்ட கட்டுரையைப் படிக்கப் படிக்க எனக்கு இந்த ஐயம் வலுக்கிறது.

ஈரோட்டுப் பாதை என்ற புத்தகத்திற்குத் தங்கள் கட்டுரை ஒரு மறுப்புரையாக இருக்குமானால் அந்தப் புத்தகத்தில் உள்ள அடிப்படை உண்மைகளை அது மறுத்திருக்கவேண்டும். ஆனால் அப்படி மறுத்ததாகத் தெரியவில்லையே! நானும்தான் தங்கள் கட்டுரையைப் படித்துப்படித்துப் பார்க்கிறேன், கட்டுரையின் எந்தப் பகுதியிலும் "மறுப்பு" இருப்பதாகவே காணப்பட

வில்லை! பிறகு என் ஐய
வதிலே வியப்பென்ன
றது?

"**நம் கண் முன்னே
வெளுத்தது! கதிரவன் எழு
டான்! புதிய ஒளி எங்கு
விட்டது. சுயமரியாதைக்
டத்தில் மட்டுந்தானா, இல்லை
தமிழகம் முழுவதுமே புரட்சி
பான்மை பொங்கித் ததும்
நாடெங்கும் நமது நாதம்
றது. தென்றல் வீசுகிறது
வொரு துறையிலும் மறு
தேவை என்ற துடிதுடிப்பு
படுகிறது. எப்படி ஏற்
இந்தப் புதிய நிலை? யாரால்
தது இது?**" என்று "ஈ
டுப் பாதை" ஆசிரியர் கூ
என்று நீங்கள் துவக்கிய
நான் பயந்தே போய்விட்
அந்தப் புத்தகத்தின் ஒவ்
வாக்கியத்தையும் அலசி
ஆராய்ந்து உதறித் தள்ளி
தான் நீங்கள் பேனாவைக்
வைப்பீர்கள் என்று நி
ஆனால் கடைசியில் பா
போனால் நீங்கள் கட்டு
எழுதிய நோக்கமே வேறு
றல்லவா தெரிகிறது!

ஜீவா அண்ணா, ஒரே க
இரண்டு குருவிகளை அடித்
கிறீர்களே, அந்தத் திறமை
நான் என்னென்று
வேன். தங்கள் கட்டுரை
ஒரு கண்ணோட்டத்தில்
தால், அது சுயமரியாதைக்
களைத் தாக்கு தாக்கு
தாக்குவது போலத்தான்
படுகிறது. ஆனால் இன்
கண்ணோட்டத்தில் பார்த்
அது ஈரோட்டுப் பாதையின
மைச் சிறப்புகளை அறியா
கும் கம்யூனிஸ்டுகளு
அவற்றை நன்றாக எ
காட்டுவது போலவே இ
றது. அப்படிப் பார்த்
உங்களை உங்கள் கூட
லேயே குறை கூறிக்கொ

"முகத்து உதித்
களுக்குத் திருப்தி—நீங்
ஹமானுக்களை நன்ருகச்
இருக்கிறீர்கள் என்று;
ப் பார்த்தால் உங்
னச்சான்றுக்குத் திருப்தி
சுயமரியாதைக ம்தாழூர்
தாக்குவது போல் எழுதி
ள் தம் உண்மை உயர்
ரித்துக் காட்டி இருக்கி
ன்று. அண்ணு! உங்
றமையே திறமை!

* * *

ோ போகிருரோ அவர்
தரியுமா, தோழி!"
தரியாதே அம்மா! யார்
?"
வரா? அவர் ஒரு
க்கள்ளர்."
யையோ அம்மா, திரு.
அவர்!"
டி பேதாய், கூவாதேடி!
ப் பேசு!"
ன் அம்மா! கள்ளர் என்
பிறரைக் கூவி அழைத்து
ரைக் காட்டிக்கொடுக்க
டாவா?"
து. ஏன் தெரியுமா?
ஒரு புது வகையான கள்
பொதுவாகக் கள்ளர்கள்
ருளேயும் பொன்னேயுந்
திருடுவார்கள்!"
ம் அம்மா, அப்படித்
வழக்கம்."
ஞல் இவர் என்ன செய்
தரியுமோடி தோழி, என்
த்தையே கவர்ந்துவிட்
பெரிய திருடாடீ இவர்!'
லைவி, தோழியிடம் பேசிய

* * *

ங்கள் கட்சித் தலைவர்
கெட்டவரப்பா, கண்ணு!"
ன்னடா இளங்கோவன்,
அப்படிச் சொல்கிருய்!
லே உள்ள வீர மறவர்
எல்லாம் அவரைப் போற்றுகின்
றனரே!

"அவர்களுக்கென்ன தெரி
யும் கண்ணு, அவருடைய
உண்மை விலே!"

"எனக்குப் புரியவில்லேயே நீ
சொல்வது! என்னதான் கூறுகி
ருய் நீ?"

"எங்கள் தலைவர் மிகக் கெட்
டவர் என்கிறேன். ஏன் தெரி
யுமா? அவர் எப்போதும்
போர் போர் என்று போர்க்களக்
காதை வாசிக்கிருரே தவிர மந்
திரி பதவியா, சட்ட சபை
நுழைவா, டின்னர் டேபிலா,
பாங்க் வெடிங் ஹாலா
இவற்றையெல்லாம் நிணேப்பதே
இல்லேயப்பா. ஒரு கட்சி என்
ருல் நமக்கு கொஞ்சம் சொத்து
சுகம், சில பட்டம் பதவி, உற்
ருர் உறவினர்க்குக் கொஞ்சம்
சவுகரியம் செய்ய வசதி இதெல்
லாம் வேண்டாமா? ஒன்றும்
கிடையாதப்பா இந்தக் கிழவர்
தலைமையில்! வெறும் இன
எழுச்சிப் போராட்டந்தான்
"இவரால் கண்ட பலன்!"

—கட்சித் தொண்டர்களுக்
கிடையே, தம் தலைவரைப் பற்றிய
பேச்சு.

* * *

"டெய்லர் துரைசாமி ஒழிக!
டெய்லர் துரைசாமி ஒழிக!"

ஜவுளிக்கடை—பால சுந்தரம்
சாய்வு நாற்காலியில் சாய்ந்த

(8-ம் பக்கம் பார்க்க)


K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா

28-2-48 முதல் 2-வது வாரம்

திருச்சி,

ரத்தினவேலுத் தேவர் ஹாலில்

அறிஞர் C. N. அண்ணுத்துரை M.A., எழுதிய

—சிந்தனைச் சித்திரம்—

வேலைக்காரி

—நாடகம்—

தினசரி இரவு 10 மணிக்கு — ஞாயிறு மாலை 6-30 க்கு

திங்கள் நாடகமில்லை

டிக்கட்: 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0

போர்வாள்

28—2—48 சனிக்கிழமை

# தாயின்மேல் ஆணை! தந்தைமேல் ஆணை!

தாயின்மேல் ஆணை தந்தைமேல் ஆணை
தமிழகத்தின் மேல் ஆணை
தூய என் தமிழ்மேல் ஆணையிட்டே நான்
தோழரே உரைக்கின்றேன்
நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்.
ஆன என் தமிழர் ஆட்சியைநிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்.
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்.

சென்ற கிழமை, திருச்சியிலே, மலைக்கோட்டைக்கு அருகிலே, கூடி நின்று எக்காளமிட்ட ஆயிரமாயிரம் திராவிட மாணவ மணிகளின் சூளுரை இது.

பெற்றால் திராவிட நாட்டைப் பெறுவோம்—சொந்த ஆட்சியைப் பெறுவோம்—வடநாட்டு வம்பர்க்கும் உள்நாட்டு ஆரியர்க்கும் தலை வணங்கத் தேவையில்லாத கட்டற்ற விடுதலை வாழ்வு பெறுவோம்—சேரனுக்கும் சோழனுக்கும் பாண்டியனுக்கும் சொந்தக்காரர், எனும் நம் பெயருக்கேற்ற இன்பப் புதுநிலை பெறுவோம் — தமிழன் ஆட்டும் சுட்டு விரல்கண்டு ஆடிற்று இவ் வையம் என்று கேட்டு நாம் இன்ப ஊற்றுக் கேணியிற் குதித்து குதித்தாடும் புது வாழ்வு பெறுவோம்—இல்லையேல் சுடுகாடு புகுவோம் என்று அந்தச் சிங்க ஏறுகள் அன்று வீர முழக்கம் புரிந்தன.

இன்பத் திராவிடத்தில் வடநாட்டு அரசா? செங்குட்டுவன் பரம்பரையை ஆள டாடா பிர்லா—டால்மியா கூட்டமா? என்ற கேள்வி, கொற்கையும் புகாரும் முசிரியும் தொண்டியும் என துறைமுகப் பட்டினங்கள் நின்று நிலவிய நாட்டிலே இன்று வணிகத்திற்கும் வடக்கு நோக்கிக் கையேந்தி நின்று வாழ வேண்டிய நிலை வந்ததே என்ற வேதனை, ரோமரும் கிரேக்கரும் பொன்னும் பொருளும் கொண்டு வந்து குவித்துவிட்டு, அவற்றிற்கு மாற்றுப் பொருள்களாக அகிலும், தேக்கும், அழகான முத்தும், வாசனைத் திரவியங்களும், மயிலும், அதன் பீலியும் அரிசியும், பிறவும்

கொண்டு சென்ற இனி
போய் நகர் பொருள்
கும் நாம் டில்லி நோக்கித்
னிட்டுத் திரிவேண்டிய
உள்ளோமே என்ற
றல், வெள்ளையன் ஆ
வடநாட்டுப் பனியா ஆ
வில்லையே என்ற வருத்
றுத்ததுபோதும் — போர்
போம் இனி—செல்வோம்
களம்—வெல்வோம் வே
என்ற வீர உணர்ச்சி, "
இன்னும் ஏன் தாமதம்!
போர்? அணை தாரீர்! எ
வன்மையின் உமக்கு
இல்லையோ" என்ற கோப
பிறந்த பொன்னாட்டிற்கு
கிட்டா முன்னம் நம்
அமைதி என்பது ஏது?
இருப்பதுதான் நல்லதா?
துடி துடிப்பு. "உயிர் நமக்
லமா? அல்லவே! நம்
திராவிடத்தின் விடுதலைப்
டத்தில் நம் உயிர் போனல்
அதனினும் பேறு ஒரு வி
னுக்கு என்னவேண்டும்
என்ற தியாக சிந்தனை—
உணர்ச்சிகளும் மா
எழுந்து, அந்த மாணவ
களை அலைமோட்டு இ
அவர்களுடைய உள்ளங்க
கணம் வீரத்தில் தோய்ந்
கணம் தியாகத்தில் மிதந்
கணம் கோபத்தில் குதித்
றொரு விநாடி வருத்தத்தில்
இன்னொரு விநாடி வேக
கைநந்து, இறுதியில் போர்க்
காதை வாசிக்கத் தொட
இனி என்ன செய்தாலும்
ஆயிரம் ஆயிரங்கள் அ
காக எதிர்ப்பட்டாலும்
பகைவர் நூற்றுக்கள் ஒன்
நூறாக மட்டுமல்ல, ஆயிரம்
யிரம் நூறாயிரம் என்ற மு
உருண்டு திரண்டு உருவா
சரியே, தென்னாட்டைத்
நாடாக்கி, சோஷலிச சமு
தை அதில் அமைப்பதே இ
என்று தீர்மானிப் பாசல்
கூடிய மாணவர்கள் திட்
மாகக் கூறிவிட்டனர்.

எங்கு உள்ளம் படைத்
வாலிப வீரர்கள், பணக்கு
பாயுமே உங்கள் மீது எ
அதுபற்றிய கவலை எம
என்கின்றனர். நின்றச்

அழைப்புத் தாள் நீட்டுமே என்றால், நீட்டட்டுமே' நாங்கள் என்ன சிறு நரிக்கூட்டமா சிறை என்றதும் நடுங்கி ஒதுங்க" என்கின்றனர். ஆள்வோரின் கூர்வாள் பாயுமே என்றால் அதன் முனை மழுங்கும் எம் நெஞ்சம் எனும் வயிரத் தூண் முன்னே என்கின்றனர். பாது காப்புச் சட்டம் நிழல்போல் தொட ருமே நும் பின்னே என்றால், நிழல் என்ன எம்மைக் கொல்லுமோ என்கின்றனர். அதிகார பீடம் உறுமிடாதோ என்றால் உறுமல் எம் உள்ளத்தை உலுக்குமோ என் கின்றனர். மாற்றார் தோள்வலி யும் துணைவலியும் மிக்கவர் என் றால் எமக்கு நியாயமும் நேர்மை யும் உண்டு துணை செய்ய—வேறு துணை ஏதுக்கு என்கின்றனர். எத் தகைய "அக்னிப் பரீட்சை"க் கும் தயார் கூறிவிட்டனர் அன் னர். கரடுமுரடான பாதையானா லும், கல்லும் முள்ளும் நிறைந்த சாலையானாலும் செல்லத் துணிந்து விட்டனர். வேங்கையும் வேழமும் எதிர்ப்படும் என்றாலும், சிங்கமும் சிறுத்தையும் சீறிப் பாய்ந்திடும் என்றாலும் கவலையின்றி ஈரோட் டுப் பாதையில் செல்ல முனைந்து விட்டனர். மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் பாராது, கரு மமே கண்ணாய் இருக்க முடிவு கட்டிவிட்டனர். பயங்கரப் பாதை —ஆபத்தான பயணம் — திடீர்ப் பள்ளங்கள் ஏராளம்—கருக்கிருட்டு துணைக்கு வருவார் எவருமில்லை— அத்தனையும் தெரியும் — ஆனாலும் பயணம் செய்யத் தவறோம் என்று உரைத்துவிட்டனர். தூங்குதல் போன்றது சாக்காடு; பின்னர் தூங்கிவிழித்தல் நம் பிறப்பு என்று அன் பாடிவிட்டனர். அந்தத் துணிச்சலை, தைரியத்தை, அஞ் சாத நெஞ்சத்தை, தியாக சிந் தனையை, "மரணத்தை நாம் தழு வினும் பாதகமில்லை — நம் நாட்டை இன்பம் தழுவ வேண்டும் —அதுதான் வேண்டுவது" என்ற அவர்கள் எண்ணத்தை திருச்சி மாணவர் மாநாடு எழிலுற விளக் கிக் காட்டிவிட்டது.

திராவிடம் வாழ்ந்தது முன்னாள், இடையே வீழ்ந்தது, ஆரிய நச்சர வம் தீண்டிய காரணத்தால் ஈரோட்டு மருந்து வீழ்ந்த திராவி டத்தை எழுப்பிற்று, இந் நூற் றுண்டில், எழுந்த திராவிடம் நடக்க முடியவில்லை. காரணம், கால்க ளில்—கைகளில் — கழுத்தில் — இடுப்பில்—மார்பில் எங்கும் தளை கள்—எங்கும் இருப்புச் சங்கிலிகள் —எங்கும் அடிமை விலங்குகள், அவை திண்ணிய உடலை இறுக்கிப் பிணித்து, அழுத்தி அடக்கி, உயிர்க் கொலை செய்கின்றன. அந்த அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிய வேண்டுவதே இன்றைய முதற் பணி, மிக மிக அவசரமாகச் செய்து முடித்தாக வேண்டிய பணி. இன்னும் இரண்டோர் ஆண்டுகள் திராவிடம் இந்தத் தளை களுக்கிடையே சிக்குண்டு நலியு மானால் பிறகு அதை மீட்பதரிது. ஆகவே திராவிடத்தின் மீட்சிக் கான விடுதலைப்போர் உடனே நிகழ்த்தப்பட்டாகவேண்டும். இனி எந்தக் காரணம் கொண்டும் இந் துஸ்தான் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால், பிர்லா அமைக்கும் தங் கக் கூண்டிலே, டில்லிச் சங்கிலிக ளால் பிணிக்கப்பட்ட நிலையிலே திராவிடநாடு நிறுத்தி வைக்கப்பட் டிருப்பதை நாம் கண்டும் காணா தார்போல் காலங் கழிக்கும் துர்ப் பாக்கிய நிலையை நீடிக்கவிடக் கூடாது.

இது திராவிட கழகத்தின் முடிவு. இதுவேதான் இந்த நாட்டு மாணவர் கழகத்தின் முடிவும் என்பதை, திருச்சி மாணவர் மாநாடு எடுத்து மொழிந்துவிட்டது.

"இந்தியாவே, உன்னைக் கண்ட துமே கண்கள் கலங்குகின்றன. நந்தவனத்துச்சொந்தக்காரர்களுக் கிடையே ஏற்பட்ட பூசலினால் நந்த வனத்து நறுமண மலர்கள் ஒன்றை யும் விடவில்லை பூப் பறிக்கவந்த கள்ளன்" என்றார் **கவிஞர் இக்பால்** அன்றோர் நாள். இன்று திராவிடத் தின் நிலையும் இதுவேதான். திரா விட இனத்தவர் ஒன்றுபட்ட முன்னணி அமையாது, சிறுசிறு காரணங்களைக் காட்டித் தம்முளே தாம் பிணங்கிக் கிடக்கின்றனர். பூம்பொழிலுக்கு உடையார் இங்ஙனம் பூசல் விளைக்கக் கண்ட பனியா பூம்பொழிலின் நறுமலர் கள் ஒன்றையும் விடாது பறித்துச் செல்கிறான்.

திராவிடர் கழகம் இந்தச் சோக சம்பவத்தைக் காண்கிறது. "முத லில் பூப்பறிக்கும் கள்ளனை நம் பூம் பொழிலைவிட்டுத் துரத்துவோம், நம் பொழிலில் பிறர் எவரும் புகா வண்ணம் சுற்றுச் சுவர் ஒன்று அமைப்போம், பிறகு ...று பகைகளைத் தீர்க்க வகை ...டு வோம்" என்கிறது.

திராவிடர் கழகம் மட்டுமல்ல, திராவிட மாணவர் கழகமும் இதையேதான் சொல்கிறது.

நம் நாடு நலமுற, நம் மக்கள் வாழ, நம் மொழி வளம் பெருகிட இதுதான் வழி. இது ஒன்றுதான் வழி. வேறு வழி இல்லை. வேறு வழிகளில் செல்வது திராவிடத்தின் அடிமை வாழ்க்கையில் மேலும் அடிமைத்தனம் கூட்டுவதாகவே முடியும்.

திருச்சியில் கூடிய வடமண்டல திராவிட மாணவர் மாநாடு நாட் டுக்கு அறிவிக்கும் அபாய அறி விப்பு இதுவே.

---


## தமிழர்களுக்கோர் புதிய ஆயுதம்

# வீரசக்தி

### ஒரு திங்கள் வெளியீடு

அறிஞர்களின் கட்டுரைகள், கதை கள், கவிதைகள், போட்டிப் பகுதி கள், தமிழ்ப் படச் செய்திகள், ஆகிய பல பகுதிகளைத் தாங்கி 1-3-48 முதல் ஒவ்வொரு மாத முத லிலும் வீரசக்தி வெளிவரும்.

| | |
|---|---|
| தனிப்படி | 0-2-0 |
| ஆண்டுக் கட்டணம் | 3-0-0 |
| 6 திங்களுக்கு | 1-12-0 |

**எல்லா ஊர்களுக்கும் படி 1க்கு 0-12-0 வீதம் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை.**

**வீரசக்தி அலுவலகம்,**
10, வெங்கடகிருஷ்ணன் தெரு,
**சென்னை 21.**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணம் கூறிக்கொண்டிருந்தார் இதுபோல.

அவர் மகன் குப்புசாமி அங்கே வந்தான்.

"அப்பா, அப்பா, என்ன இது! ஏன் இப்படிக் கூச்சல் இடுகிறீர்கள்!"

"போடா முட்டாள்! உனக்கென்ன தெரியும் டெய்லா துரைசாமியைப்பற்றி. அவன் சட்டை கோட் இவற்றையெல்லாம் தைத்தால் தையல் அவ்வளவு அழுந்தும் ரொம்ப நாளைக்குத் துணி கிழிவதே இல்லை! நமக்கு ஜவுளி வியாபாரம் நடப்பதும் இல்லை! டெய்லர்கள் இப்படி இருந்தால் நமக்கு வியாபாரம் நடக்குமாடா? டே தடிக் கழுதை! நான் கேட்கிறேன்! சும்மா நிற்கிறியேடா! வியாபாரம் நடக்குமா?

—**கரூர் ஜவுளி பாலசுந்தர முதலியார் தன் மகனுக்குக் கூறியது.**

* * *

"முனிசாமி பிள்ளை வகுப்பில் படிக்கிறானே சோமு என்ற பையன்! சுத்த அயோக்கியன் சார் அவன்"

"என்ன சார் அப்படிச் சொல்கிறீர்கள்! அவன் மிக நல்லவனாயிற்றே!"

"நல்லவனும் நல்லவன்! போங்க சார். நீங்களே பாருங்கள்! நம்ம இரண்டு பேர் வகுப்பிற்கும் ஏதாவது முதல் பரிசு வருகிறதா! எல்லாம் அந்த சோமு பையன் தானே சார் தட்டிக்கொண்டு போகிறான்! இப்படி ஒரு பையன் ஒரு வகுப்பிலே படித்துக்கொண்டு முதல் பரிசுகளை எல்லாம் தானே வாங்கிக்கொண்டுபோனால் நம் வகுப்புகள் என்ன ஆவது சார், என்ன ஆவது?"

—**பள்ளிக்கூடத்தில் இரண்டு ஆசிரியர்களுக்கிடையே உரையாடல்!**

* * *

அண்ணா, நான் சொன்னால் நம்புவீர்களோ மாட்டீர்களோ, உங்கள் கட்டுரையைப் படித்தபோது என் உள்ளத்தில் இந்த உரையாடல்கள் தான் நின்று நர்த்தனமாடின. தலைவி, வீதி வழியே சென்ற தன் காதலனை ஒரு கள்ளன் என்று கூறியதும், கட்சித் தொண்டன் இளங்கோவன் தன் இயக்கத் தலைவரை மிகக் கெட்டவர் என்று வர்ணனை செய்ததும், கரூர் ஜவுளி பாலசுந்தர முதலியார் டெய்லர் துரைசாமி ஒழிக எனச் சொன்னதும், பள்ளிக்கூட ஆசிரியர், மாணவன் சோமுவை அயோக்கியன் என்று உரைத்ததும் முதலில் கேட்கும்போது இழிவுரைகள் போலத்தான் காணப்படுகின்றன. ஆனால் முழுதும் கேட்டபின்னரோ அவை இழிவுரைகள் அல்ல — புகழுரைகள் என்று தெரிகின்றன. இதுவேபோலத்தான் உங்கள் கட்டுரை கூட சுயமரியாதை இயக்கத்தையும், திராவிடர் கழகத்தையும், அவை இரண்டும் செல்லும் ஈரோட்டுப் பாதையையும் **பழிப்பது போலக்** காணப்படுகிறது, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது. ஆனால் முற்றிலும் படித்து, அதன் உள்ளுறையை உணர்ந்த பின்னரோ அது பழிச்சொல் அல்ல பழிப்பதுபோல் புகழ்தல் எனும் துறையைச் சேர்ந்தது என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிடுகிறது.

சும்மா சொல்லாதேடா தம்பி, புள்ளி விவரங்களைக் காட்டிப் பேசு என்று நீங்கள் கூறிவிட்டாலும் உங்கள் தோழர்கள் எவரேனும் கூறலாம். கூறுவது நியாயமும் கூட. அதற்காகத்தான், உங்கள் கட்டுரையிலிருந்தே வெட்டி எடுக்கப்பட்ட பல வாசகங்களை எடுத்துக் காட்டுகிறேன் ஒவ்வொன்றாக நீங்கள் படியுங்கள். மற்றவர்களையும் படிக்கச் சொல்லுங்கள். நீங்கள் படித்த பிறகும் உங்களுக்கு ஐயமிருந்தால் கேளுங்கள், இந்த வாசகங்களைக் கொண்ட ஒரு கட்டுரை ஈரோட்டுப் பாதையை **உண்மையில்** தாக்கும் கட்டுரையா—தாக்கும் கட்டுரையாக இருக்க முடியுமா என்பதை!

## உங்கள் கருத்துரைகளிற் சில:

"ஈரோட்டுப் பாதைதான் தமிழ் மக்களின் லட்சியபுரியை அடையச் சிறந்த பாதை என்று நம்பி அதன் வழிச் செல்கிற இளைஞர்கள் தமிழ்
நாட்டில் பலர். ஸ்தாபன ரீதியா
தொழிலாளர்களிலும் ஒரு சி
பகுதியார் மேற்படி கருத்தை
தழுவி நிற்கிறார்கள். ஆரம்ப ஆ
யர்களிடையிலும், த ...கிரிய
ளிடையிலும், மாணவர்களிடை
லும் இந்தக் கருத்து **குறிப்பி**
**டத்தக்க அளவு** காணப்படுகிறது......

"விடுதலை ஆர்வம், தமி
பற்று, இன எழுச்சி, புது வாழ்
நாட்டம், புரட்சி உணர்ச்சி பொ
துடைமைக் காதல் இவைகளுக்
உள்ளத்தைப் பறிகொடுத்த இ
ஞர்களில் அநேகர்......திராவிட
கழகத்தில் குவிகிறார்கள்.........

"(ஈ. வெ. ரா. காங்கிரசைவிட்
விலகிய பிறகு அவரால்) ஜா
எதிர்ப்பு, சடங்குகள் எதிர்ப்
புரோகித மறுப்பு, பிரசார சன்
மாருதம் தமிழ்நாடு பூராவும் ந
பெற்றது. தாழ்த்தப்பட்ட பார்
பனரல்லாத மக்களை **குறிப்பிட**
**தக்க அளவுக்கு** இழுக்க முடிந்த
ஈ. வெ. ரா. வால்.........

"பார்ப்பனீயம், வருணாஸ்ரம த
மம், மூடப் பழக்க வழக்கங்க
ஆகியவைகளையும், அவைகளு
குக் காரணமான வேத சாத்தி
புராணங்களையும், குறிப்பா
மனுஸ்மிருதியையும், இவை
ளுக்கு அடிப்படையான இந்து
மத்தையும், பெண்ணடிமை
யும் இடைவிடாமல் எதிர்த்து நா
முழுதும் சுற்றிச்சுற்றி, ஈ. வெ. ரா
வும் அவரைப் பின் பற்றியவ
களும் பிரசாரம் செய்து வந்தா
கள்.

"பல காலமாக மிதிக்கப் ப
டுத் தாழ்த்தப் பட்டுக் கிடந்த ம
கள் உள்ளங்களில் தன்மான
உணர்ச்சி கொழுந்து விட்டு எ
யவே அவர்களுடைய அனுதாப
மும் ஆதரவும் சுயமரியாதை இய
கத்திற்குக் கிடைத்தன......

"1929-ம் வருஷ ஆரம்பத்தில்
முதலாவது மாகாண சு. ம. மா
நாடு நடந்தது ..சமூக ஜாதி ம
விஷயங்களில் முற்போக்குக் கரு
துக் கொண்ட ஆயிரக் கணக்கா
வாலிபர்கள் மாநாட்டில் கலந்
கொண்டனர் என்பது மறக்க மு
யாதது...

"செங்கற்பட்டு மாநாட்டுக்கும்
ஈரோட்டு மாநாட்டுக்கும் இடையி
ராமாயண ஆராய்ச்சி, பெரி
புராண ஆராய்ச்சி, பார

ராய்ச்சி மற்றும் பல புராண ராய்ச்சிகளும் வெளி வந்தன. ந்துமத எதிர்ப்புப் பிரசாரத்தின் லனைக வைதீகர்கள், சைவவைண ப்பண்டிதர்களின் எதிர்ப்பும் வரவி ர்களின் ஆதரவும் ஒன்றுபோல ர்ந்தபோதன் .. ..... [ஜீவானந்த ண்ணு! என்ன அருமையாக ரோட்டுப் பாதையை வெளுத்து ங்குகிறீர் !]

"சு. ம. இயக்கத்தில் பகுத்தறிவு தலிடம் பெற்று கிளர்ச்சி நடை ற்றது. இந்து மதத்தோடு நிற் மல், கிறிஸ்தவ மகம்மதிய மதங் ளிலும் பகுத்தறிவு ஆராய்ச்சி டைந்தது.....ஜஸ்டிஸ் கட்சிக் ம் சு. ம. கட்சிக்கும் (இந்தக் லத்திலே) அதிகம் தொடர்பில்லை .பகுத்தறிவு கண்ணோட்டத்தை ல துறைகளிலும் ஈ. வெ. ராவும், யமரியாதைக் காரர்களும் செலுத் னர்கள் ..பகத்சிங்கின் தூக்கைப் ற்றி பயங்கரமான தலையங்கம் ழுதிற்று 'குடியரசு.' நூற்றுக் ணக்கான வாலிபர்கள் பகத் சிங் கப் பின்பற்ற வேண்டும் என்று ண்டைப் பிரசண்டம் அடித்தார் . வெ. ரா....இந்தக் காலத்தில் ான் கதர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப் ல் சு. ம. இயக்கம் முனைந்தது...

(விருது நகர் மாகாண சு. ம.) மாநாட்டின் முக்ய அம்சம் ல்லா மதங்களும் ஒழிய வேண்டு மன்ற தீர்மானம்...ஈ. வெ. ரா. சாவியத் யூனியனிலிருந்து இங்கி ாந்துக்குச் சென்ற போது பல தாழிலாளத் தலைவர்களைச் சந்தித் ார். காலஞ் சென்ற தோழர் க்லத்வாலாவைக் கண்டு, அவ ாடு உரையாடி, பிரிட்டிஷ் தாழிலாளர் இயக்கத்தைப் பற் ிய உண்மைகளைத் தெரிந்து காண்டார் ..மாஸ்கோ வழியை ரில் கண்டறிந்து வந்த ஈ. வெ, ா. அதை மாற்றி அரசியல் கொள் கயுடைய இயக்கமாக்க எண்ணி ார். தோழர் சிங்கார வேலு வாடு கலந்து ஒரு திட்டம் தயாரிக் ப் பட்டது ..சவுந்திர பாண்டி ன், வி. வி. ராமசாமி போன்ற . ம. பணக்காரர்கள் இந்தத் திட் த்திற்கு ஆதரவு கொடுக்கவில்லை. . ம. சங்கத்தின் தலைவராய் ருந்த ஆர். கே. சண்முகம் வெ.ரா. வின் போக்கை எதிர்த் க் கடிதம் எழுதினர்...ஜஸ்டிஸ் ட்சிக்குப் பலம் தேடிவந்த சு. ம. பிரமுகர்கள் பலர் முகத்தைச் சுளித் தார்கள். ஆனால் (சுயமரியாதைக் காரர்களின்) சமதர்ம பிரசாரமும் கிளர்ச்சியும் இவற்றைச் சட்டை செய் யாமல் முன்னேறிக் கொண்டிருந்தன. 1933,34-வது வருஷங்களில் (சுயமரி யாதை) சமதர்மப் பிரசாரம் தமிழ் நாடு முழுவதும் காட்டுத் தீ போல் பரவிற்று ..சு. ம. காரர்களின் சம தர்மப் பிரசாரத்தைக் கேட்ட மக் கள் ஆயிரக் கணக்கில் திரண்ட னர்...பிற்போக்கு அரசியல் வாதி கள் ஈரோட்டுத் திட்டத்தைக் கண்டு நடுங்கினர். சு. ம. இயக்கம் பொதுவுடைமை இயக்கமாக மாறி விட்டதென்று கூச்சலிட்டனர். பழைய சு. ம. காரர்களில் பலர் கட்சியின் போக்கு பிடிக்கவில்லை யென்று ஒதுங்கினர். சிலர் அர சாங்கத்தின் அடக்கு முறைக்கு ஆளாவோம் என்று அஞ்சி மறைந் தனர். ஆனால் புதியவர்கள் பலர் இயக்கத்தில் சேர்ந்து கொண்டே இருந்தனர், அந்த நாளில் காங்கிர ஸைவிட (சு. ம.) சமதர்ம இயக்கத் திற்கு, தமிழ் மக்களிடம் அமோக மான ஆதரவு இருந்தது ..இந்தக் காலத்தில் (சு ம காரர்களால் சம தர்ம இலக்கிய சின்னஞ் சிறு நூற் கள் வெளியிடப்பட்டன. சோஷலி சம், உழைப்பாளிகளுக்கு ஏன் உலக மில்லை போன்ற நூல்கள் குடியரசுப் பதிப்பகத்திலிருந்து வெளிவந்தன...ஜமீன்தார் அல்லா தார் மாநாடு, லேவாதேவிக்காரர் அல்லாதார் மாநாடு, இந்தக் கால கட்டத்தில் நடந்தவைகளே. இந்த மகாநாடுகளில் பொப்பிலி அரசர் களும் சர். முத்தையா செட்டியார் களும் பட்ட பாடு கொஞ்ச நஞ்ச மல்ல ..(ஈ வெ ரா) குடி அரசில் எழுதிய "இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்" என்ற தலையங் கத்திற்காகத் தண்டிக்கப் பட்டார். "குடி அரசு" ஜாமீன் கேட்கப் பட்டு நிறுத்தப்பட்டது; பின்னர் தோன்றிய "புரட்சி"க்கும் ரூ 2000 ஜாமீன் கேட்கப்பட்டு நிறுத்தப் பட்டது ..மேதின விழா கொண்டா டப் பட்டது சுயமரியாதை சமதர் மிகளால். தொழிலாளர் மகாநாடு களும் அங்கே நடை பெற்றன... அரசாங்கத்தார் மீண்டும் திடீ ரென்று 1935-ல் (குடி அரசு) பத்தி ரிகைக்கு ஜாமீன் கேட்டனர். பகுத் தறிவு நூற்பதிப்புக் கழக வெளியீ டான "நான் நாஸ்திகன் ஏன்" பறி முதலாயிற்று...சு. ம. இயக்கத்தின் மீது சர்க்காரின் கோபப் பார்வை விழுந்தது...ஜஸ்டிஸ் கட்சிக்கு சம தர்ம மெருகு கொடுக்க என்னென் னவோ செய்து கொண்டிருந்தார் ஈ. வெ. ரா...தமிழகத்தின் பல பகுதிகளிலும், பல நேர்மையான தீவிர நல் இளைஞர்கள், மாணவர் கள், திராவிடக் கழகத்தில் திரண்டு நிற்கிறார்கள். திராவிடக் கழகம் தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்றும், அது தான் அதி தீவிரக் கொள்கையுடைய தென் றும், அதன் மூலம் மாத்திரமே சமூக அடிமைத்தனம் வேரோடு ஒழியுமென்றும் அவர்கள் நம்பு கிறார்கள். அவர்கள் நம்பிக்கையின் நேர்மையில் எனக்கு அல்லது கம்யூ னிஸ்ட் கட்சிக்கு என்னவும் சந்தேக மில்லை..."

* * *

பேரன்புள்ள அண்ணு, ஜீவானந்த அண்ணு, அருமை அண்ணு, உங்கட்கு என் வாழ்த்தும் நன்றியும். எவ்வளவு மன உறுதி இருந்தால், எவ்வளவு நெஞ்சுத் தைரியம் இருந் தால், எவ்வளவு அஞ்சாத உள்ளத் திண்மை இருந்தால் இவ்வளவு அரிய உண்மைகளை, ஒரு கம்யூனிஸ்ட் இதழிலே—அதிகார பூர்வமான இதழிலே, அதிகார பூர்வமான முறையிலே, அழுத்தந் திருத்தமாகச் சொல்லி இருப்பீர்கள்! எத்தனை ஆண் டுகளாக கம்யூனிஸ்ட் நண்பர்கள் இந்த உண்மைகளை மறைத்து வந் தார்கள்! எத்தனை மேடைகளில் இது பற்றிய பேச்சு வந்தபோது, அமைதி அமைதி என்று சொல்லிக் கொண்டே, வேறு பேச்சுப் பேசி வந்திருக்கிறார்கள்! எவ்வளவு காட் களாகத் தங்கள் இதழிலே ஈரோட் டுப் பாதை பற்றி ஒரு வரிகூட வராத வண்ணம் இருட்டடிப்புச் செய்திருக் கிறார்கள். பாவம்! அவர்களுக்குத் தான் எவ்வளவு சிரமம், எவ்வளவு உழைப்பு, எவ்வளவு பாடு ஈரோட்டி லிருந்து வீசிய புரட்சிப் புயலை மறைக்க முனைந்ததில்! ஈரோட்டுப் பாதை பற்றிய முழு விவரங்களை அறியா வண்ணம் தொழிலாளர் பட்டாளங்கள் இருட்டில் உலவட்டும் என்று எத்தனை எத்தனை திரைகளை என்னென்ன விதத்தில் அந்தப் பட் டாளங்களின் முன்னே தொங்கவிட் டார்கள். தாங்கள் ஒரே ஒரு கட்டுரையின் மூலம்—அதுவும் ஈரோட்டுப் பதையைத் தாக்குகின்ற

'பாணி' யில் அமைந்த கட்டுரையின் மூலம்—அவர்கள் இத்தனை நாட்களாகக் கட்டிக் காத்துவந்த இருட்டறையை இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டீர்களே, இதை, நான்—உம்முடைய தம்பி—நீர், தளர்ந்து, ஒதுங்கி, மறைந்து, வேற்றிடம் புகுவதற்கு முன்னால் இருந்த அதே பாசறை வீட்டில் உலவும் நான் பாராட்டாமல் இருக்க முடியுமா?

ஈரோட்டுப் பாதையின் இருபது ஆண்டுப் பயணத்தில் ஏற்பட்ட சிக்கல்களை, இடையூறுகளை இன்னல்களை, தடைகளை, அரசியலார் உறுமல்களை அத்தனைக்கும் மீறி தன்மான இயக்கம் தலைநிமிர்ந்து நின்ற தைரியத்தை, உறுதியை, உத்வேகத்தை இவ்வளவு அழகாக, அருமையாக, விஞ்ஞான ரீதியாக, அடுக்கடுக்காக எடுத்துக் காட்டிய நீர் கடைசியில் ஒரு வாக்கியத்தைக் கோத்திருக்கிறீர்—நான் மறக்கவில்லை—ஈரோட்டுப் பாதையை மிக மிக இழித்துக் கூறும் வாக்கியம் "ஈரோட்டுப் பாதை புரட்சிப் பாதை அல்ல, பொது உடமைப் பாதை அல்ல, பொதுமககள் பாதையுமல்ல. சாதி மத தாழ்வுகளிலிருந்தோ, சமூகக் கொடுமைகளிலிருந்தோ, ஜமீன்தார்-முதலாளித்வ சுரண்டல்களான சகலவிதச் சுரண்டல்களிலுமிருந்தோ தமிழ் மக்களை விடுவிக்கும் பாதையுமல்ல."—இந்த வாக்கியத்தை நான் படித்தேன். சிரித்தேன். நீங்கள்கூட இதை எழுதி முடித்ததும் சிரித்துத்தான் இருப்பீர்கள். சிரிப்பதற்குத்தானே இதை எழுதினீர்கள்! நகைச் சுவைக்கு இலக்கியம் சேர்க்கத்தானே இந்த வாசகத்தை இறுதியில் சேர்த்தீர்கள்! ஏன், நான் சொல்வது சரிதானே அண்ணா!

சாதிக் கொடுமை ஆயினும் சரி, மத தத்துவங்களானாலும் சரி, சமுதாய மேடு பள்ளங்களானாலும் புராணிகர் பொய்யுரைகளானாலும் சரி, ஜமீன்தார்—முதலாளிமார்—நிலப்பிரபுக்களின் சுரண்டல் இயந்திரங்களானாலும் சரியே, மக்கள் முன்னேற்றத்தின் தடைக்கற்கள் எவையாயினும் அவற்றை வேரோடும் வேரடி மண்ணோடும் எடுத்தெறிவோம் எறிவோம் என்று வீரமுழக்கமிட்டு தன்மான இயக்கம் சென்ற இருபது ஆண்டுகளாக ஆற்றிவந்த அறப்போர் முழுவதையும் வீராவேசமான நடையில் எடுத்துக் கூறிவிட்டு, கடைசியில், இவ்வளவு பிற்போக்குச் சக்திகளையும் ஒழிப்பதற்கான பாதை ஈரோட்டுப் பாதை அல்ல என்று சொன்னால் அதை நகைச் சுவைப் புதுமொழி என்றல்லாமல் வேறு எப்படிக் கொள்ளமுடியும்? நான் வாழும் இடத்தில் என்னைப் பார்த்து "மூணு முணுக்கும்" சில பேரறிவாளர்களின் (பேருக்கு அறிவாளர்கள்!) முகத்தைத் துடைக்க நான் செய்த கண்கட்டு வித்தை என்கிறீரா, அதுவும் சரிதான்.

மறுபடியும் ஓய்விருக்கும்போது சந்திப்போம். உங்கள் நலத்தை மட்டும் அடிக்கடி எழுதுங்கள். ஒரு வேளை அந்தப் புதுப் பிரதேசத்தின் வெப்பம் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் உங்கள் பழைய வீட்டிற்கு வந்துவிடுங்கள். சொந்த வீட்டிற்கு வருவதற்கு வெட்கம் என்னத்திற்கு? மேலும் உம்மை வரவேற்க நான் ஒரு தம்பி இருக்கிறேன்.

**இங்ஙனம்,**

(உமது வார்த்தைப்படி)

"பொதுவுடமையிலும், புதிய வாழ்விலும், புரட்சியிலும், நேர்மையும், உறுதியும் கொண்டுள்ள அன்பார்ந்த திராவிடக் கழக வாலிபத்" தோழனை, **உம் அருமைத் தம்பி,**

**தூறுமாறு.**

**குறிப்பு:**

மறுபடியும் ஈரோட்டுப் பாதை பற்றி ஏதாவது எழுதுவதாய் இருந்தால் முன்கூட்டியே தெரிவியுங்கள். குடி அரசு திராவிடநாடு பைண்ட் வால்யூம்கள் அனுப்பி வைக்கிறேன் உங்கள் ஆராய்ச்சியை எளிதாக்க.

---

## போர்வாள்

*

### சந்தா விரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்படி | 0-1-6 | 0-2-0 |
| ஆண்டுத் தொகை | 5-0-0 | 6-8-0 |

★

147, பவழக்காரத் தெரு,
சென்னை.

## ஜீ. டி. நாயுடு விளக்கவுரை.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான முறையில் தென் இந்தியாவிற்கு ஒரு தனி மத்திய சர்க்கார் ஏற்படுத்துவதற்கு வட இந்திய மத்திய சர்க்கார் அனுமதிக்குமேயானால், அதன் பிறகு இரு சர்க்கார்களும் சிநேக முறையில் பழகினால், அந் நிலையில் தான் வடக்கும் தெற்கும் சேர்ந்த இந்தியா பலம் பொருந்தியதாக விளங்கும். அந்த மாதிரி இல்லையானால், பாகிஸ்தான்—இந்துஸ்தான், வட இந்தியா—தென் இந்தியா, கிழக்கு பஞ்சாப்—மேற்கு பஞ்சாப், இந்து மகா சபை—முகம்மதிய சபை, தீண்டத்தக்கவர்—தீண்டப்படாதவர், ராம ராஜ்யம்—மாப்பிள்ளை ராஜ்யம், பொதுவுடமைக்காரர்கள்—சமதர்மவாதிகள், காங்கிரஸ் வாதிகள்—காங்கிரஸ் அல்லாதார், பிராமணர்—பிராமணரல்லாதார், வங்காளிகள்—பீகாரிகள், மைசூர் ராஜ்யத்தவர்—கொச்சின் ராஜ்யத்தவர் முதலிய சண்டை சச்சரவுகளும், பிற தகராறுகளும் பல விதங்களில் என்றைக்குமே நிலவும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும் என்பது உறுதி.

பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய விருப்பமும் வேறல்ல. தென் இந்திய மக்கட்தொகையினரில் பெரும் பான்மையோரான நாம் தனி சர்க்கார் வேண்டுமென்று விரும்பினால் அவருக்குத் தடையொன்றும் இருக்காது.

தலைவர்கள் நினைக்கின்றபடி இந்த சண்டையானது எளிதில் முடிந்துவிடாது.

இதுவரை தமிழர்கள் அல்லது தென் இந்தியர்கள் எனப்படுவோர் அவர்களுடைய ரத்தத்தையும், சக்தியையும் வீணாக்கியிருக்கிறார்கள்; அவர்கள் ஏமாற்றப்பட்டும் அழுத்திவைக்கப்பட்டும் இருக்கிறார்கள். ஆனபோதிலும் இப்போது அவர்களுடைய குருதி தூய்மையடைந்துவிட்டது; அவர்கள் புது முறுக்குடன் திகழ்கிறார்கள். தங்கள் தங்கள் உரிமைகளைப் பெறவில்லையென்றால், தங்களுக்கு வாழ்வு என்பதே இல்லை என்பதை உணர்ந்துவிட்டார்கள். ஆதலால், அவற்றை அடைய எத்தகைய போராட்டத்திற்கும் அவர்கள் தயாராகிவிட்டார்கள்.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள், தொழில் இலாகா மந்திரியின் அலுவலகத்துக்குப் போனேன். அப்போது மணி, இரவு 12. மந்திரியின் அலுவல் அறையிலும் மற்ற அறைகளிலும் விளக்குகள் எரியக் கண்டேன். உத்தியோக வேலைகளைக் கவனிப்பதில் மந்திரி ஈடுபட்டிருந்தார். தொந்தரவில்லாமல் 'பைல்' களைப் பார்வையிடுவதற்கு அதுதான் தக்க நேரம் என்று முடிவு செய்தார் போலும் என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் அப்போதுகூட, அவரைப் பார்ப்பதற்காக சிலர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். ஆகையால், மந்திரியை காலை 6, 7 மணிக்குப் பார்ப்போமே என்று நினைத்தேன். அதேபோல டெலிபோனில் சொல்லிவிட்டு, காலை 6-30-க்கு அவர் வீட்டுக்குப் போனேன். ஆனால், எனக்கு முன்பே, அவரைப் பார்ப்பதற்காக 4, 5 பேர் காத்திருந்தார்கள். கால் மணி நேரத்துக்குள் இன்னும் அநேகர் வந்து சேர்ந்தார்கள். நான் அங்கிருந்த கால்மணி நேரத்திற்குள்ளாக பல வெளியூர்களிலிருந்து வந்த டெலிபோன் அழைப்புகளுக்கும் உள்ளூர் டெலிபோன் அழைப்புகளுக்கும் பதிலளித்த வண்ணமிருந்தார்.

நமது பிரதம மந்திரி, அவரது சொந்த தைரியத்தாலும், ஒழுக்க சீலத்தாலும் எவ்வளவு அதிகமாய் வேலை செய்து வருகிறார் என்பதையும், நேரம் என்பது அவருக்கு எவ்வளவு அருமையாகிவிட்டதென்பதையும் 'பைல்' (Files) களை கவனிப்பதில் எவ்வளவு அதிகப்படியாக ஈடுபட்டுழைக்கிறார் என்பதையும் இந்த நகரவாசிகளில் பலர் தெரிந்து கொண்டிருக்கலாம். எவ்வளவு காலத்துக்கு, நமது மந்திரிமார்கள் இப்படி பயங்கரமான, கடூரமான, சிரமமான வேலைகளில் பொறுப்புடன் ஈடுபட்டு உழைத்துக் கொண்டே இருக்க முடியும்? இதனால் அவர்களது உடல் நலம் கெடுவதல்லாமல், அவர்களின் திறமையும் குறைவே செய்யும். திறமைக்கு ஊறு விளைவதோடல்லாமல், நாளாவட்டத்தில், அவர்களுக்குப் போதுமான ஊக்கமும் இல்லாது போகும்.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? முதலாவதும் முக்கியமானதும், அவர்கள் தங்களுக்குத்தாங்களே சுதந்திர புருஷர்கள் அல்ல. அவர்களுக்குக் கீழ்ப்பட்ட செக்ரடேரியேட் ஆசாமிகளுக்கும், எம். எல். ஏ. களுக்கும், ஓட்டர்களுக்கும், எதிரிகளுக்கும் பயந்து நடக்க வேண்டியவர்களாகவும், அவர்கள் எல்லோரையும், திருப்திப்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, மறு பேச்சு பேசாமல் கீழ்ப்படிந்து நடவுங்கள் என்று ஆணையிடும் டில்லி மேல் இடம் இருக்கவே இருக்கிறது! அநேக மந்திரிகள் அடிக்கடி டில்லி சென்று, செய்யவேண்டிய ஒவ்வொரு செயலுக்கும் செல்ல

---

**இராதாமணாளனின்**
எழுத்தோவியம்

★

# மனப்புயல்

★

**புதிய தொடர் கதை**

★

அடுத்த இதழில் ஆரம்பம்

---

வேண்டிய ஒவ்வொரு பயணத்திற்கும் காங்கிரஸ் மேலிடத்திலிருந்து புத்தியும் போதனையும் கேட்கவே வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஏதாவது ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டாலும் சரி, பொது மக்கள் நலத்திற்காக ஒரு புது வழியைப் பிறப்பிக்க விரும்பினாலும் சரி, அரிசியோ இரும்போ ஏதோ ஒன்றை வினியோகிக்கும் முறையில் மாறுதல் பண்ணவேண்டியதிருந்தாலும் சரி, பொருள்களின் விலையைக் கூட்டவோ குறைக்கவோ வேண்டியிருந்தாலும் சரி, இந்த மாகாணத்துக்கென்று தொழில் வளர்ச்சியோ, கல்வி மாறுதலோ, செய்யவேதாயிருந்தாலும் சரி, தென் இந்தியாவின் வளர்ச்சிக்காக ஏதேனும் புதிய திட்டங்கள் வகுக்கவேண்டுமாயினும் சரி, அவர்கள் வடநாட்டிற்குப் போய்த்தீரவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அங்கே போவதன் மூலமாவது அவர்களின் நோக்கம் நிறைவேறுகின்றதென்று பார்த்தால் அதுதான் இல்லை. முக்காலும் விரோதமான தீர்ப்போடுதான் திரும்பி வருகின்றார்கள். எவரேனும் ஒருவர் மேலிடத்துக் கட்டளைகளுக்குக் கொஞ்சம் மாறாக நடந்தால், அல்லது சொந்த மனச் சாட்சிக்குக் கட்டுப் பட்டு நடந்தால், அவர் ஒரே நிமிஷத்தில் வெளியே தூக்கி எறியப் பட்டு விடுவார். சுபாஷ் சந்திரபோஸுக்கு என்ன நேரிட்டது? பிரகாசம் மந்திரி சபையின் கதி என்ன வாயிற்று? அவர்கள் மேலிடத்துக் கட்டளையை மீறிச் சென்றார்கள்; அதனால் அவர்கள் தூக்கி எறியப் பட்டார்கள் அல்லவா?

நமது ஓமந்தூர் ரெட்டியார் கடு[illegible] நிரத்தோடும் தைரியத்தோடும் செயலாற்றி வருகிறார் என்று நான் கேள்விப் படுகிறேன். லஞ்ச ஊழியங்களை வேரறுப்பதில் மிகவும் அக்கரையோடு இருக்கிறார் என்றும் அறிகிறேன். இவருடைய நடவடிக்கைகளுக்கும் மேலிடத்துக் கட்டளைகளுக்கும் இதுவரை மோதல் ஏற்படவில்லை. அந்த நிலைமை ஏற்படும்போது அவரும் அந்த சகல வல்லமை வாய்ந்த மேலிடத்தால் அதோகதிக்கு ஆளாக நேரும். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், முதல் அமைச்சர், தம்முடைய மனச் சாட்சிக்கு விரோதமாய் வடநாட்டுத் தாக்குதலுக்கு இணங்கி கொடுக்காமல் தாம் வகிக்கும் பதவியை விசிறி எறிந்து விடத் துணிவார் என்றே நான் கருதுகிறேன். தயவு செய்து நினைவில் வையுங்கள், நான் யாரையும் இங்கே தாக்கவில்லை; நா[illegible] நாள் சம்பவித்துக் கொண்டிருக்கும் உண்மைகளைத்தான் சொல்லுகிறேன்.

சென்னை மந்திரி சபையைப் பற்றி நான் குறைகூறவில்லை. தென் இந்தியாவில் தொழில் வளர்ச்சி பெறவேண்டுமென்று நம் மாகாண மந்திரி சபையாரும் விரும்பத்தான் செய்கிறார்கள். எனது நோக்கங்களையும் ஒப்புக் கொள்கிறார்கள்; எனது கருத்துகளுக்கு இதம் அளிக்கவும் விரும்புகிறார்கள். ஆனால் என்ன செய்வார்கள், பாவம்; அவர்களை

கைகள் கட்டப்பட்டிருப்பதாக அவர்களே உணர்கிருர்கள். ஏதோ காரணார்த்தமாக, சக்தியற்ற இந்த மந்திரி சபையை எதிர்த்துத் தொந்திரவு பண்ணவேண்டிய திருக்கிறதே தவிர, உண்மையில் நமது பரிதாபத்துக்கு உரியவர்களே நம் அமைச்சர்கள்.

ஆனாலும் அநேக சந்தர்ப்பங்களில் தைரியமாகவும், ஊக்கமாகவும் நடந்துகொண்ட நமது மாகாணப் பிரதமரைப் பாராட்டித்தான் ஆகவேண்டும். அவரைப்போலவே, மற்ற மந்திரிகளும் மனத்தளர்வின்றி நடந்துகொள்வார்களென்று நம்புகிறேன். நமது மந்திரிகள் எல்லோரும், தென் இந்தியா தனியாகப் பிரியவேண்டுமென்கிற நமது உரிமைக் கிளர்ச்சியை ஆதரிப்பார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்; ஏனென்றால் நமது கோரிக்கை நியாயத்துக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டது.

நமது தென் இந்தியப் பிரிவினைக் கோரிக்கையை அவர்கள் (மந்திரிகள்) வெளிப்படையாக ஆதரிக்காவிட்டாலும், என்னைப்போலவே அவர்களுடைய மனமும் உள்ளுக்குள் புழுங்கிக்கொண்டுதானிருக்க முடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்லமுடியும்.

ஒரு மந்திரி மாற்றி இன்னொரு மந்திரி தினந்தோறும் அல்லது வாரம் ஒரு முறையேனும், டில்லிக்குப் பறந்து சென்று, பலவற்றிற்காகவும் வட இந்திய மந்திரிகளிடம் போய்க் கெஞ்ச வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் கேட்டதெல்லாம் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, நம்முடைய கருத்துக்கு அவர்கள் விரோதமாய் இருப்பார்களென்று நினைப்பதற்கு இடமில்லை.

அநேக தடவை நமது மாகாண மந்திரிகள் ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிருர்கள். ஆகவே, தென் இந்தியா தனியாகப் பிரியவேண்டும் என்று தென் இந்தியர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை நிச்சயமாக நம்புகிறேன், நமது காங்கிரஸ் மந்திரிகளும் ஆதரிக்கத்தான் செய்வார்கள். ஒருகால் இன்று ஆதரிக்காவிட்டாலும் ஒரு சில நாட்களுக்குள் ஆதரிக்கத்தான் போகிருர்கள்]

*    *    *

[டில்லி சர்க்காரானது, அதற்குத் தெரியாமலே, சுயலாபம் கருதும் சில வட இந்திய மனிதர்களின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. எவரேனும் கேட்கலாம், தென் இந்திய நலன்களைக் கவனித்துக் கொள்வதற்காக, தென் இந்திய கனவான்கள் கூட மத்திய சர்க்காரில் சேர்க்கப்பட்டிருக்கிருர்களே என்று. ஆம். டாக்டர் ஜான் மத்தாய், திரு. ஆர். கே. ஷண்முகம், திரு என். கோபாலசாமி அய்யங்கார் ஆகிய தென் இந்தியர்கள் அங்கு மந்திரிகளாய் இருக்கின்றார்கள் என்பது உண்மை. ஆனால், இவர்களால் என்ன செய்ய முடியும்? வட இந்தியக் காரியங்களைச் செய்வதற்குத்தானே இவர்கள் அங்கே இருக்கிருர்கள்! அதற்காகத்தானே அந்த சர்க்காரில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள்! இவர்களும் அங்கு போன பிறகு, தங்களை அறியாமலே வடக்கிந்திய மத்திய சர்க்காரில் சொக்கிக் கிடக்கின்றார்கள்.

மத்திய சர்க்காரின் மந்திரிகள் கூட, சொற்ப வட இந்தியரின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும் பழைய சர்க்கார் இயந்திரங்களின் நிர்வாகத்திற்கு அடங்கியவர்களாகத்தான் இருந்துவருகின்றார்கள். அந்த இயந்திரம் சுதந்திர இந்தியாவின் தேவைக்கு அடியோடு தகுதி இல்லாதது. அந்த இயந்திரத்தின் பண்புகளையும் தன்மைகளையும், உளுத்துப்போன நடைமுறைகளையும் இனிச் செப்பனிட்டுத் தற்கால தேவைக்குத் தகுதியாய்த் திருத்துவதென்பது முடியாத செயல்.

ஏனென்றால், அந்த இயந்திர அமைப்பில் உட்கார்ந்து இருப்பவர்கள், தற்காலத் தேவைக்கு ஏற்ற விதமாய் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமென்று, ஒரு வேளை தாங்களே ஆசைப்படுவதாய் வைத்துக் கொண்டாலும், அதற்கு அவர்களுக்குக் கொஞ்சம் கூட நேரம் கிடையாது. பாகிஸ்தானுக்கும் இந்துஸ்தானுக்கும், இடையே நடைபெறும் பேயாட்டத்தைக் கவனிப்பதற்கே அவர்களுடைய நேரமெல்லாம் செலவாகி விடுகிறது. சுலபத்திலோ சீக்கிரத்திலோ முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர் பார்ப்பதற்கில்லாத விதத்தில், வடக்கே இந்துமுஸ்லி[ம்] கொலை பாதகச் சண்டைகள் நட[ந்]துகொண்டிருப்பதால், அவர்க[ள்] மீது குறைபடுவதிலும் பயனில்லை தான்.

ஆனால் இப்பொழுது நாம் செய்[ய] வேண்டிய அவசியமும் அவசரமுமான கடமை என்னவென்றால் வகுப்புவாதச் சண்டை முளைப்[ப]தற்கே இடங்கொடாமல் நம் தென் இந்தியாவைக் காப்பாற்றி ஆக வேண்டும்; வகுப்புச் சண்டைகள் சூழ்நிலை இங்கே உருவாகா[]மல் பார்த்துக் கொள்ளவேண்டும். நமது தென் இந்திய மக்கள் அமை[]தியாகவும் அச்சம் இல்லாமலும் தக்க பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்பதான எண்ணம் மனமா[ர] நமக்கு இருக்குமானல் இப்போதே இந்த நோத்திலேயே மத்திய சர்[க்]காரின் தொடர்பிலிருந்து விலகி நம் சுதந்திரத்தை அடைந்தா[க] வேண்டும். வட இந்திய சர்க்கா[]ரின் பிடிப்பில் தென் இந்தியா இருந்து வருகின்றவரையில், நமது மாகாண மந்திரிகள் நல்லெண்ணங் கொண்டிருந்த போதிலும், ஏதாவது அபாயத்துக்குரிய விபத்[து] தென்னட்டில் வெடிக்குமானல், அதனல் பரவும் குழப்பத்தைத் தடுப்பதென்பது இயலாது போய்விடும்]

உண்மையாகவே, வட இந்திய கொள்கைகளுக்கு மாருக பண்டிதர் நேரு அவர்கள் தென் இந்தியர்களை மந்திரிகளாகவும் கவர்னராகவும் தேர்ந்தெடுத்ததற்கு அன்[ன]ருடைய தைரியத்தை மெச்சி நாம் பாராட்ட வேண்டியவர்களாய் இருக்கிருேம். பிறவியிலேயே அவர் ஒரு சமதர்ம வீரர். அவர் தம்முடைய சோஷலிச நோக்கோ[டு] காரியங்களை நடத்தக்கூடுமானல், இங்கு தனியே ஒரு தென்னட்[டு] சர்க்கார் தேவை என்று எவரும் கேட்கவோ, கிளர்ச்சி செய்யவோ மாட்டார்கள். அவர் தம்முடைய கொள்கைகளை நடை முறையில் கொண்டு வருவது முடியக்கூடியதா? தாம் முயற்சி செய்வதாக அவர் கூறுகிருர். ஆனால் மற்றவர்கள் அவருடன் ஒத்துழைக்க மாட்டார்களாதலால் நடை முறையில் அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

(10-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
...a Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor M. Ilanchaliyan B...